# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.87/மா/2022**

**நாள். 08 .08.2022**

திருமதி. M. இந்திராதேவி மற்றும்
திரு.G. மாரீஸ்வரன், திருத்தங்கல்,
சிவகாசி. – முறையீட்டு மனுதாரர்கள்

ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி – எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல், சுப்பிரமணியர் கோவில் தெரு, எண்.6/4–ல் வசிக்கும் திருமதி. M.இந்திராதேவி, மற்றும் திரு. G. மாரீஸ்வரன் ஆகியோரின் 23.06.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.06.2022–ல் பெறப்பட்டு 87/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரர்களின் மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

விருதுநகர் மாவட்டம், திருத்தங்கல், சுப்பிரமணியர் கோவில் தெரு, எண்.6/4–ல் வசிக்கும் திருமதி. M.இந்திராதேவி, மற்றும் திரு. G. மாரீஸ்வரன் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 23.06.2022 நாளிட்ட தங்களது மனுவில் :

திருத்தங்கல் பகுதியை சேர்ந்த திரு. ஆ.கதிரவன் என்பவர் 12.05.2022 அன்று தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவரிடம் ஒரு புகார் மனுவை கொடுத்துள்ளார். அதில் சிவகாசி மாநகராட்சியின் திருத்தங்கல் பகுதியில், கடந்த பத்து வருட காலமாக பொதுமக்களிடம் மானூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் இணைப்பு வழங்குவதாக கூறி நகராட்சி நிர்ணயம் செய்த தொகையை விட கூடுதல் தொகையாக ரூபாய் 25,000/– வரை எதிர்கட்சிகளுடன் இணைந்து அதிகாரிகள் பணத்தை பெற்றுக்கொண்டு, நகராட்சிக்கு கட்ட வேண்டிய டெபாசிட் பணத்தை கட்டி மக்களுக்கு ரசீது போட்டுத்தராமல் முறைகேடாக அனுமதியின்றி குடிநீர் குழாய் இணைப்பு கொடுத்துள்ளனர். இதனால் மாநகராட்சிக்கு பெறும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று பலமுறை மாநகராட்சி ஆணையாளரிடம் புகார் மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லாத காரணத்தினால் பொதுமக்களை ஏமாற்றிய சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது பாரபட்சம் பார்க்காமல் கடும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அது தொடர்பாக மனுதாரர் திரு.ஆ.கதிரவன் என்பவரையும் மற்றும் மாநகராட்சியின் சார்பாக பணிமேற்பார்வையாளர் திரு.பாலகிருஷ்ணன் என்பவரையும் தீர விசாரித்ததற்குப் பிறகு **(01.06.2022)** அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் கீழ்க்கண்டவாறு ஆணையிட்டுள்ளது.

சிவகாசி மாநகராட்சியின் திருத்தங்கல் பகுதியில் முறைகேடான அனுமதியற்ற குடிநீர் குழாய் இணைப்புகள் மூலம் அரசுக்கு பெறும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதை இந்த மன்றம் கண்கூடாக காணமுடிகிறது.

முறைகேடான அனுமதியற்ற குடிநீர் குழாய் இணைப்புகள் தொடர்பாக கள ஆய்வு செய்திட செயற்பொறியாளர் தலைமையில் ஒரு குழு அமைத்து மொத்த குடிநீர் குழாய் இணைப்புகள் எவ்வளவு உள்ளது அதில் எவ்வளவு அனுமதியற்ற குழாய் இணைப்புகள் உள்ளன என்பதனை கண்டறிய வேண்டும். இதுபோன்ற முறைகேடான அனுமதியற்ற குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டு, அதன் மூலம் அரசுக்கு ஏற்பட்டுள்ள பெறும் வருவாய் இழப்பிற்கு காரணமான சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் உரிய விதிகளின் கீழ் கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்துள்ளது.

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகளின் முறைமன்ற நடுவம் இவ்வளவு கடுமையான உத்தரவுகளை பிறப்பித்து சிவகாசி மாநகராட்சி ஆணையாளருக்கு வன்மையான கண்டனங்களை பதிவு செய்தும்கூட மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் இப்பவும் திருந்தவில்லை. மறுபடியும் தவறுகள் செய்த அதிகாரிகளை காப்பாற்றும் நோக்கத்திலேயே செயல்படுகிறார்.

முறைமன்ற நடுவம் உத்தரவில் கூறியதை போல சென்னையிலிருந்து ஏதும் வேறு நேர்மையான அதிகாரிகள் வந்து, திருத்தங்கல் பகுதியில் அனுமதியற்ற குடிநீர் குழாய் இணைப்பு அதிகமாக உள்ளது உண்மைதான் என்று கண்டுபிடித்துவிடுவார்களோ என நினைத்து, கடந்த ஒருவாரகாலமாக காலை முதல் மாலை வரை திருத்தங்கல் பகுதியில் உள்ள ஒவ்வொரு வார்டிலும் வீடு வீடாக சென்று, மாநகராட்சி அதிகாரிகளால் முறைகேடாக போடப்பட்டிருந்த குடிநீர் குழாய்களை அதே மாநகராட்சி அதிகாரிகளை (ஏ.கண்ணன்) கொண்டு அடைத்து விடுகிறார்கள். அப்படி அடைக்கும் போது பல தெருக்களில் பொதுமக்கள் அழுது புலம்பி பரிதவித்துப்போய் கண்ணீர் வடிக்கின்றனர். ஒரு சிலர் கோபத்தில் தகாத வார்த்தைகளால் திட்டி சண்டையும் போடுகிறார்கள்.

அதையெல்லாம் துளியும் கூட பொருட்படுத்தாமல், மாநகராட்சி அதிகாரிகள் தப்பிக்கும் நோக்கத்தில் காவல் நிலையத்தின் பெயரைச் சொல்லி மிரட்டியும் மற்றும் உங்களுக்கு அபராததொகை விதிக்கப்படும் என்று மிரட்டியும், குழாய்களை அடைத்து விட்டு உங்களுக்கு மறுபடியும் குடிநீர் இணைப்புகள் வேண்டும் என்றால் மறுபடியும் நீங்கள் பணம் செலுத்தி ரசீது வாங்கிக்கொள்ளுங்கள் இல்லையென்றால் நீங்கள் தண்ணீர் பிடிக்க முடியாது என்று கூறிவிட்டு செல்கின்றனர்.

ஒரு சில பொதுமக்கள் தண்ணீரை பிடிக்க வேண்டாம் என்று விரக்தியில் வீட்டிலேயே இருந்து விடுகிறார்கள். ஒரு சிலர் மாநகராட்சி அதிகாரிகளின் மிரட்டலுக்கு பயந்து மீண்டும் பணத்தை செலுத்தி ரசீது வாங்கிக்கொள்வோம் என நினைத்து மாநகராட்சி அலுவலகத்திற்கு அனைத்து ஆவணங்களையும் எடுத்துச்சென்றால், இப்போது கம்ப்யூட்டர் வேலை செய்யவில்லை

எப்போது சரியாகும் என்று தெரியாது. ஆதலால் நீங்கள் ஏதாவது ஒரு பேங்கிற்கு சென்று, " The City Commissioner of Municipal Corporation" என்று உங்களது டெபாசிட் தொகை DD எடுத்து கொண்டு வாருங்கள் என்று சொல்லி, அந்த பேங்க் DD யையும் ஆவணத்தையும் மாநகராட்சி அலுவலகத்தில் கிளார்க் ஆக பணிபுரியும் திரு.செல்லபாண்டியன் என்பவர் வாங்கி வைத்துகொண்டு, கம்ப்யூட்டர் சரியானவுடன் உங்கள் DDயை பயன்படுத்தி ரசீது போட்டுத்தருவோம் என்று கூறி அனுப்புகிறார்.

ஏற்கனவே ஏமாந்த பொதுமக்கள் மாநகராட்சி அலுவலகத்தில் DDயை கொடுத்துவிட்டு மீண்டும் பணம் பறிபோய்விடுமோ என்ற ஒரு வித அச்சத்துடனே மிகவும் பரிதாபமாக வீட்டிற்கு செல்கின்றனர்.

என்னுடைய கேள்வி என்னவென்றால், மாநகராட்சியில் கம்ப்யூட்டர் வேலை செய்யாத இந்த சமயத்தில், எதற்காக பொய் சொல்லி மிரட்டி அவசரம் அவசரமாக குழாய்களை அடைக்க வேண்டும். எதற்காக அவசரம் அவசரமாக ஏமாந்த மக்களை மீண்டும் பணம் செலுத்த வர சொல்ல வேண்டும். எதற்காக அவசரம் அவசரமாக மக்களை அலைய விட்டு பேங்கில் DD எடுத்துக்கொண்டு வரச்சொல்ல வேண்டும். ஆக தவறு செய்த அதிகாரிகள் தப்பிப்பதற்காக எந்த ஒரு எல்லைக்கும் சென்று பொதுமக்களை அலையவிடுவார்கள் என்பதற்கு இதைவிட சான்று, வேறு என்ன வேண்டும்.

தற்போது நடந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு பாதி காரணமே குழாய் பொருத்துநர்(பொ) திரு.ஏ.கண்ணன் என்பவர்தான். இவர் திருத்தங்கல் நகராட்சியில் கிணற்று காவலராக இருந்த போதிலிருந்து கடந்த மே மாதம் வரை நூற்றுக்கணக்கான புகார்கள் இவர்மீது உள்ளது. நாங்கள் கவுன்சிலர் ஆன பிறகு எங்களது வார்டுக்கு உட்பட்ட பகுதி மக்கள் நிறையபேர் திரு.ஏ.கண்ணன் மீது, புதிய குடிநீர் இணைப்பு பெறவேண்டி விண்ணப்பித்ததால் மாநகராட்சி நிர்ணயம் செய்த டெபாசிட் தொகையை விட அதிகமாக ரூ.25,000/– வரை லஞ்சமாக கேட்கிறார் என்று எங்களிடம் கூறினார்கள். நாங்கள் உடனே அந்த புதிய குடிநீர் இணைப்பு வேண்டி விண்ணப்பித்தவர்களை திருத்தங்கல் பகுதியின் பொறுப்பு அதிகாரியான உதவி செயற்பொறியாளர் திரு.ரமேஷ் அவர்களிடம் அழைத்துச் சென்று லஞ்சம் கேட்ட திரு.ஏ.கண்ணன் அவர்களையும் வரவழைத்து நேரிலேயே புகார் செய்தோம். பல முறை புகார் செய்தும் ஒரு முறை கூட நடவடிக்கை எடுக்காமல் எங்களிடம் பேசி பேசியே சமாதானம் செய்து அனுப்பி விடுவார்கள்.

கடந்த மே மாதம் ஆரம்பத்தில் கூட எங்களது வார்டுக்கு உட்பட்ட திருத்தங்கல் சிறுவர் பூங்கா தெருவை சேர்ந்த திரு. முனியாண்டி என்பவர், திருத்தங்கல் அலுவலகத்திற்கே பெட்ரோல் கேனுடன் வந்து நான் பெட்ரோல் ஊற்றி சாகப்போகிறேன் என்று வந்து விட்டார். நல்ல சமயம் நான் அங்கே இருந்ததால் அவரை தடுத்து நிறுத்திவிட்டேன். பின்பு ஒருவாரம் கழித்து முனியாண்டி அவர்கள் விசாரித்து பார்த்ததில் திருத்தங்கல் நகராட்சியில் கிணற்று காவலராக பணிபுரியும் திரு.ஏ.கண்ணன் அவர்கள் இல்லாமல் புதிய குடிநீர் இணைப்பு பெறமுடியாது என்பதை அறிந்து கொண்டு, கண்ணன் அவர்களுக்கு போன் செய்து வீட்டிற்கு வரவழைத்து ரூபாய் 25,000/– பணத்துடன் சேர்ந்து தகுந்த ஆவணத்தையும் கொடுத்துள்ளார். பின்பு பணத்தை வாங்கிய மறுநாளே முனியாண்டியின் வீட்டிற்கு முன் குடிநீர் குழாய் போட்டுக்கொடுத்துவிட்டு, இதற்கு உண்டான ரசீது வர ஒரு வாரம் வரை ஆகும் என்று சொல்லி விட்டுச் சென்றுள்ளார். அதன் பின்பு மூன்று ஆண்டுகள் ஆகியும் போன மே மாதம் வரை ரசீது போட்டு கொடுக்கவில்லை. கடந்த மூன்று வருடமாக நகராட்சி அலுவலகத்திற்கு ரசீது கேட்டு, ரசீது கேட்டு நடைநடையாய் அலைந்து திரிந்து

இறுதியில் போன மே மாதம் விரக்தியின் உச்சிக்கே சென்று பெட்ரோல் ஊற்றி சாகப்போகிறேன் என்று திருத்தங்கல் அலுவலகத்திற்கே வந்துவிட்டார். அந்த சமயம் நல்ல வேலை நான் இருந்தததால் அவரின் முடிவை மாற்றி, இங்கு புகார் மனு குடுக்க வேண்டாம் சிவகாசி மாநகராட்சி ஆணையாளரிடம் புகார் மனுவைக்கொடுத்து ரசீது வாங்கித் தருவதாக அவரிடம் உறுதி அளித்தேன். அன்றைக்கே அரை மணிநேரத்திற்கும் மேலாக திரு.ஏ.கண்ணனைப் பற்றியும் மற்றும் திருத்தங்கலில் உள்ள மற்ற அதிகாரிகளை பற்றியும் அவ்வளவு தெளிவாக ஆணையாளரிடம் சொல்லி இருந்தேன். இவர்களிடத்தில் எங்கள் திருத்தங்கல் பகுதி மக்கள் பணத்தை பறிகொடுத்து விட்டு ஏமாந்துபோய் உள்ளனர் என்றும் இவர்கள் மீது தயவுசெய்து நடவடிக்கை எடுங்கள் என்று கூறினேன். உடனே அதற்கு ஆணையாளர் அவர்கள் முனியாண்டி அவர்களுக்கு கண்ணனிடம் இருந்து ரசீது வாங்கிய பின்பு, நாளைக்கே திரு.ஏ.கண்ணன் அவர்களை சஸ்பெண்ட் செய்கிறேன் என்றும் இனி திருத்தங்கல் பகுதியில் தவறுகள் நடக்காமல் இருக்க பார்த்துக்கொள்கிறேன் என்று எங்களிடம் உறுதி அளித்தார்.

அதன் பின்பு, ஒரு வார காலமாகியும் முனியாண்டி அவர்களுக்கு ரசீது வந்ததே தவிர குற்றம் செய்த குழாய் பொருத்துனர் (பொ) திரு.ஏ. கண்ணன் மீது எந்த நடவடிக்கையும் இல்லாமல் இருந்தது. பின்பு மீண்டும் எங்களை சமாதானம் செய்யும் முயற்சியிலேயே இருந்தார்கள் உயர் அதிகாரிகள். அதற்கு நாங்கள் முறையாக முடியாது என்று சொல்லிவிட்டு, நாங்கள் தினமும் சென்று ஆணையாளரிடம் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக திருத்தங்கலில் பணிபுரிந்த குழாய் பொருத்துநர் (பொ) ) திரு.ஏ.கண்ணன் அவரை நீக்கி விட்டு புதிய குழாய் பொருத்துநராக திரு.திருநாவுக்கரசை நியமித்தனர். எங்கள் பகுதி மக்களை ஏமாற்றி அரசுக்கு பெரும் வருவாய்இழப்பு செய்த திரு. ஏ.கண்ணன் அவர்களை சஸ்பெண்ட் செய்யாமல் சிவகாசி பகுதிக்கு மாற்றி விட்டனர். நாங்கள் எவ்வளவோ போராடியும் திரு.ஏ.கண்ணன் அவர்களை சஸ்பெண்ட் செய்யவில்லை. ஏனென்றால் திரு.ஏ.கண்ணன் அவர்களை சஸ்பெண்ட் செய்தால் அதற்கு மேல் உள்ள அதிகாரிகளுக்கும் பிரச்சினை வந்துவிடும் என்று நினைத்து அவர்களை காப்பாற்றும் நோக்கத்திலேயே அந்த சமயத்தில் இருந்தார் ஆணையாளர். எங்களால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால், எவரால் இந்த முறைகேடான அனுமதியற்ற குடிநீர் குழாய் இணைப்பு பிரச்சினை இவ்வளவு பெரியதாக வந்ததோ, அதே திரு.ஏ.கண்ணன் அவர்களை வைத்தே திருத்தங்கலில் உள்ள அனுமதியற்ற குடிநீர் குழாய் இணைப்புகளை அடைக்கின்றனர்.

TN 95 B.1928 என்ற எண் கொண்ட அரசு வாகனத்தில்,

1. திரு. ரமேஷ் (உதவி செயற்பொறியாளர்)
2. திரு.பாலகிருஷ்ணன் (பணி மேற்பார்வையாளர்)
3. திரு.ஏ.கண்ணன் (தற்போது சிவகாசியில் கிணற்று காவலராக பணிபுரிபவர்)

மற்றும் இவர்களுக்கு கீழ் பணிபுரியும் மாநகராட்சி அலுவலர்கள் என அனைவரும் ஒன்றாக சேர்ந்துதான் அனைத்து தெருக்களுக்கும் செல்கின்றனர். இவர்கள் மூன்று பேரும் குற்றச்சாட்டு எழுந்த காலத்திலிருந்து தற்போது வரை பலவருடம் ஒன்றாக ஒரே திருத்தங்கல் அலுவலகத்தில் வேலை பார்த்தவர்கள். அப்படி இருக்கும்பட்சத்தில் இவர்கள் மூன்று பேரையும் சேர்ந்து போய் அனுமதியற்ற குடிநீர் குழாய்களை அடைக்க சொல்லி யார் உத்தரவிட்டது? இதற்கு பதில் என்னவென்றால், முறைமன்ற நடுவர் உத்தரவிட்டது போல் சென்னையிலிருந்து உயர் அதிகாரிகள்

வருவதற்கு முன் " இவர்கள் செய்த தவறை இவர்களே சரிசெய்ய நினைக்கிறார்கள் ". கடந்த காலங்களில் மக்கள் யாரிடம் பணத்தை கொடுத்து ஏமாந்தார்களோ, அந்த மாநகராட்சி அதிகாரிகளை வைத்து கடந்த ஒரு வாரங்களில் திருத்தங்கல் பகுதியில் உள்ள பாதி தெருக்களில் வேகவேகமாக ஆய்வு நடத்தி முடித்து விட்டனர். அதிகாரிகள் மீது அவ்வளவாக தவறே இல்லை என்கின்ற மாதிரி ஒரு அறிக்கையை தயார் செய்து விட்டார்கள். இன்னும் ஒரு வாரகாலத்தில் மீதி உள்ள தெருக்களிலும் ஆய்வு நடத்தி முடித்து விடுவார்கள். இறுதியில் மாநகராட்சியின் சார்பாக முழுக்க முழுக்க ஒரு பொய்யான அறிக்கையை சென்னையில் உள்ள நகராட்சி நிர்வாக இயக்குனரகத்திற்கு சமர்ப்பிப்பார்கள்.

நாளடைவில் கண்ணனுக்கு அடுத்தடுத்து இருந்த உயர் அதிகாரிகள் சப்போர்ட் அதிகமாக இருந்ததால் வேலுச்சாமியை மிரட்டி ஓரம் கட்டிவிட்டு நகராட்சி அலுவலகத்திற்கு யார் குடிநீர் குழாய் இணைப்பு கேட்டு வந்தாலும் கண்ணன் தான் போட முடியும் என்ற நிலையை உருவாக்கினார். தவறு நடந்த அந்த காலகட்டத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தாமல் இருந்ததால் கவுன்சிலர்களோ அல்லது தலைவர்களோ திருத்தங்கல் நகராட்சியில் இல்லாமல் இருந்தார்கள். ஆதலால் ஒட்டுமொத்த அதிகாரங்களும் அதிகாரிகளிடத்தில் மட்டுமே இருந்தது. அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும்போது இருந்ததின் விளைவாக தான் பாவப்பட்ட திருத்தங்கல் பகுதி மக்கள் இன்று வரை அவதிப்படுகின்றனர். கடந்த 2021 ஆம் ஆண்டு மே மாதம் குழாய் பொருத்துநராக இருந்த திரு.வேலுச்சாமி அவர்கள் திடீரென இறந்து விட்டார். அதற்குப்பிறகு கிணற்று காவலராக இருந்த திரு.ஏ.கண்ணன் அவர்களுக்கு குழாய் பொருத்துநராக பொறுப்பு போடுவதற்கு முன்னரே, குழாய் பொருத்துநர் போல அனைத்து பணிகளையும் செய்து வந்தார்.

அந்த சமயத்தில் அப்போது இருந்த ஆணையாளர்(பொ) திருமதி.பாண்டித்தாய் அவர்கள் அனுபவம் உள்ள சீனியர்கள் இருந்தும் கூட கிணற்று காவலராக இருந்த திரு.ஏ.கண்ணன் அவர்களை குழாய் பொருத்துநர்(பொ) ஆக பொறுப்பு போட்டு கையெழுத்திட்டார். அதற்கு பின் வேலுச்சாமி இறந்ததில் இருந்து கடந்த மே மாதம் (17.05.2022) வரையிலான போடப்பட்ட அனைத்து அனுமதியற்ற குடிநீர் குழாய் இணைப்புகளும் முழுக்க முழுக்க கண்ணனால் தான் போடப்பட்டது. இறுதியாக நான் முனியாண்டி என்பவரை அழைத்து சென்று கொடுத்த புகாரினால்தான் பல வருடமாக மக்களை ஏமாற்றி அனுமதியற்ற குழாய்களை போட்டுவந்த கண்ணன் என்பவர் பிரச்சினை பெரிதாகிறது என பயந்து நிறுத்தினார். அந்த அளவுக்கு இந்த மக்கள் பிரச்சினைகளில் நான் துணிச்சலாக தலையிட்டு " நேர்மையான கவுன்சிலர்" என்ற முறையில் அதிகாரிகளுக்கு தொடர்ந்து கொடுத்து வந்த அழுத்தத்தின் காரணமாக, பல வருடமாக (6 ஆண்டுகள்) தொடர்ச்சியாக நடந்து வந்த தவறு என்னால் இறுதியாக முடிவுக்கு வந்தது. அதற்கு பின்பு, திருத்தங்கலில் இருந்த குழாய் பொருத்துநர் திரு.ஏ.கண்ணன் அவர்கள் சிவகாசிக்கு மாற்றப்பட்டுள்ளார். (17.05.2022) என்ற தகவல் ஊர் முழுக்க பரவி அவரிடம் பணம் கொடுத்து ஏமாந்த மக்கள் திருத்தங்கல் நகராட்சி அலுவலத்திற்கு படையெடுக்க துவங்கினர். அதையெல்லாம் துளி கூட பொருட்படுத்தாமல் கண்ணன் மீது நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரசீது போட்டுத்தராமல் திரு.ஏ.கண்ணனுக்கு ஆதரவாக உயர் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களிடம், நீங்கள் தான் மீண்டும் பணம் செலுத்தி ரசீது வாங்கிகொள்ள வேண்டும் என்று கட்டப்பஞ்சாயத்தில் தீர்ப்பு கூறுவதைப்போல கூறி மிரட்டி அனுப்பி விடுகிறார்கள். இவர்கள் மிரட்டலுக்கு பயந்து குழாய்களை அடைத்து விடுவார்களோ என்று நினைத்து பல ஏமாந்த பொதுமக்கள் போன மே மாதமே மீண்டும் செலுத்தி வாங்கிக்கொண்டனர்.

சிவகாசி மாநகராட்சி திருத்தங்கலில் கடந்த 6 வருடங்களாக பணியாற்றிய அதிகாரிகளால், முறைகேடான அனுமதியற்ற குடிநீர் குழாய் இணைப்புகளால் அரசுக்கு ஏற்பட்ட பெரும் வருவாய் இழப்பு என்னவென்றால்,

i) அரசுக்கு சேர வேண்டிய விண்ணப்ப பதிவு கட்டணம் ரூபாய் 500/–

ii) அரசுக்கு சேர வேண்டிய டெபாசிட் கட்டணம் ரூபாய் 7750/–

iii) அரசுக்கு கட்ட வேண்டிய குடிநீர் வரி கட்டணம் ரூபாய் 600/– (1 ஆண்டுக்கு)

iv) அரசுக்கு சேர வேண்டிய சாலை சீரமைப்பு கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணம் என்று 4000 ரூபாய் முதல் 7000 ரூபாய் வரை, திருத்தங்கல் பகுதியில் உள்ள சாலைகளுக்கு பணம் செலுத்த வேண்டும் (தெளிவாக சொல்ல வேண்டுமென்றால், டெபாசிட் கட்டணம் மற்றும் சாலை சீரமைப்பு, மேற்பார்வை கட்டணம் ஆகிய அனைத்து தொகைகளையும் கூட்டினால்)

| | | |
|---|---|---|
| மண்ரோடு | 11099 + பதிவுக்கட்டணம் | 500 |
| தார் ரோடு | 13923 + பதிவுக்கட்டணம் | 500 |
| சிமெண்ட் ரோடு + பேவர் பிளாக்கல் ரோடு | 14751 + பதிவுக்கட்டணம் | 500 |

v) திருத்தங்கல் பகுதிகளில் கடந்த 2016 மற்றும் 2017ம் ஆண்டே கிட்டத்தட்ட அனைத்து தெருக்களிலும் பேவர் பிளாக் ரோடு மற்றும் தார் ரோடுகள் போடப்பட்டு விட்டது. ஒருசில இடத்தில் மட்டும் தான் இன்னும் மண் ரோடு உள்ளது. ஆனால் வேலுச்சாமி மற்றும் கண்ணன் அவர்கள் மக்களிடம் ஏமாற்றி கூடுதலாக வாங்கிய பணத்தில், அவர்கள் வீட்டிற்கு முன்பு கல் ரோடோ (14751) அல்லது தார் ரோடோ (13923) இருந்தாலும் கூட மண்ரோடு (11099) என்று ரசீது போட்டு கொடுத்து விடுவார்கள். குழாய் பொருத்துநர் பதவியில் இருந்த இவர்கள் இரண்டு பேரும் விண்ணப்பப் படிவத்தில் மண்ரோடு உள்ளது என்று தவறாக படம் வரைந்து அவர்களுக்கு மேல் உள்ள உயர் அதிகாரிகளை அவர்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்து கையெழுத்து வாங்கிவிடுவார்கள். உயர் அதிகாரிகளும் இவர்கள் கொடுக்கும் விண்ணப்பப் படிவத்தில் உள்ள விவரங்களை சரிபார்க்காமல் இருந்ததின் காரணமாக ஒவ்வொரு குடிநீர் குழாய் இணைப்புகளிலிருந்தும் அரசுக்கு சேர வேண்டிய 3500 முதல் 4000 வரை சேராமல் கிட்டத்தட்ட பல லட்சம் ரூபாய் அளவில் அரசுக்கு மிகப்பெரிய வருவாய் இழப்பை ஏற்படுத்தியுள்ளனர். இந்த பெரும் வருவாய் இழப்பிற்கு உண்டான அனைத்து ஆதாரங்களும் எங்களிடம் உள்ளது.

vi) ஏற்கனவே நடைமுறையில் உள்ள குடிநீர் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டாலோ அல்லது பழுதடைந்து உடைந்தாலோ அதனை சரி செய்வதற்கு முறைப்படி அரசுக்கு ரூபாய் 500 (Maintain repair charge) பணம் செலுத்த வேண்டும். ஆனால் அதற்கு மாறாக ஒவ்வொரு வீட்டுக்காரர்களிடமும் ரூபாய் 4000 முதல் 5000 வரை பணம் பெற்றுக்கொண்டு அவர்களின் குடிநீர் குழாய்களில் தண்ணீர் அதிகமாக வரும்படி இதிலும் முறைகேடாக வேலை செய்து கொடுத்துவிடுவார்கள். இதன் மூலமாகத்தான் இவர்கள் அதிகமாக சம்பாதிக்கனர்.

கடந்த 6 வருடங்களாக முழுக்க முழுக்க அதிகாரிகள் செய்த தவறால், எங்கள் ஊர் திருத்தங்கல் பகுதிகளில் ஒரு மாதத்திற்கு ஒருமுறை தான் குடிநீர் வரும் என்ற அவலநிலை உள்ளது. எங்கள் பக்கத்து ஊர் சிவகாசி பகுதிகளில் 5 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் வரும். அப்படியிருக்கும் பட்சத்தில் திருத்தங்கலில் ஒரு மாதத்திற்கு ஒருமுறை மட்டும் வரும், குடிநீரைப் பிடித்து சேமித்து வைத்து குடித்ததால் மக்களின் உடல்நலம் எப்படி ஆரோக்கியமானதாக இருக்கும் என்று நீங்களே மனிதாபிமானத்துடன் யோசித்துப்பாருங்கள். 10 நாட்களுக்கு பிறகு சேமித்து வைத்திருந்த அந்த குடிநீரை குடிக்கும் போது எங்கள் பகுதி மக்கள் அனுபவித்து இருக்கும் வேதனைகளை வெறும் வார்த்தைகளால் மட்டும் சொல்லவே முடியாது மக்கள் அனுபவித்த கொடுமைக்காகயாவது, சம்பந்தப்பட்ட அத்தனை அதிகாரிகளும் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்.

ஒரு சில அதிகாரிகள் செய்யும் தவறால்தான் ஒட்டுமொத்தமாக பல நேர்மையான அதிகாரிகளுக்கும், அரசுக்கும் சேர்த்து அவப்பெயர் உண்டாகிறது. ஆதலால் பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் மாமன்ற நடுவர், இந்த புகாரில் நேரடியாக தலையிட்டு கடந்த காலங்களிலிருந்து தற்போது வரை தவறு செய்த அனைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மீதும் தயவு செய்து தகுந்த கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்கள்.

2. முறையீட்டு மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 12.07.2022அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு 05.07.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. திருமதி. இந்திராதேவி அவர்களின் கணவர் திரு.G. மாரீஸ்வரன் 12.7.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் தனக்காகவும் தனது மனைவியின் சார்பாகவும் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" சிவகாசி திருத்தங்கல் மாநகராட்சியில் குடிநீர் இணைப்புகளுக்கு மாநகராட்சியால் வசூலிக்கப்பட்ட தொகை முறையாக மாநகராட்சி கணக்கில் சேர்க்கவில்லை. மேற்கண்ட குடிநீர் இணைப்புகளுக்காக மாநகராட்சியால் வசூலிப்பதில் ஆணையர், உதவிப்பொறியாளர் மற்றும் இருவர் முறைகேடு செய்துள்ளனர் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகல் மற்றும் ஆவணங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் திருமதி. இந்திராதேவி அவர்கள் இம்முறைமன்றத்திற்கு அனுப்பியுள்ள 23.06.2022, 01.07.2022 மற்றும் 12.07.2022 நாளிட்ட கடிதங்களில் கண்டுள்ள விவரங்களையே எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் தனது 01.07.2022 மற்றும் 12.07.2022 நாளிட்ட மனுக்களிலும் தனது 23.06.2022 நாளிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ளதையே தெரிவித்து கூடுதலாக தான் 12.07.2022 அன்று விசாரணைக்கு செல்லவேண்டாம் என மிரட்டப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் 5வது வார்டுக்கு உட்பட்ட பகுதி மக்களிடம் பெறப்பட்ட மனுக்களையும் சமர்ப்பித்துள்ளார்.

5. சிவகாசி மாநகராட்சி ஆணையர் 12.07.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

" சிவகாசி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 24 வரை உள்ள தெருக்களில் உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் அனைத்தும் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதைப்பற்றி கண்டறிய குழு அமைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் முறையற்ற

குடிநீர் இணைப்புகள் எத்தனை உள்ளது என்பதை கண்டறிந்து அதனை முறைபடுத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் அவரது மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் குடிநீர் இணைப்புகள் வழங்கியதில் முறைகேடு என புகார் வந்ததைத் தொடர்ந்து அதில் சம்மந்தப்பட்ட கண்ணன், கிணற்றுக்காவலர் என்பவரை தற்காலிகப் பணி நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதே போன்று மற்றொருவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மேலும் ஒருவர் பணியிடையே காலமாகிவிட்டார் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எனது 11.07.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் என்றும் மேலும் இந்நேர்வு தொடர்பான புகைப்படங்கள் மற்றும் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. சிவகாசி மாநகராட்சி ஆணையர் தனது 11.07.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" திரு.கதிரவன் என்பவரால் சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் பகுதியில் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் முன்னாள் நகர்மன்றத்தலைவர், துணைத்தலைவர் மற்றும் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்களால் தொகை பெற்றுக்கொண்டு இரசீது வழங்காமல் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டதாக புகார் மனு அளித்துள்ளார். அப்புகார் மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சிவகாசி மாநகராட்சி உதவி பொறியாளர் குறிப்புரையின்பேரில் திருத்தங்கல் மண்டலம் திரு.ஏ.கண்ணன், குழாய் பொருத்துனர்(பொ) அவர்களுக்கு நேரிடையாக அனைத்து வார்டுகளிலும் கள ஆய்வு செய்து முறையற்று வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளை கண்டறிய குறிப்பாணை வழங்க அறிவுறுத்தியதின் பேரில் திரு.ஏ.கண்ணன், குழாய் பொருத்துனர்(பொ) அவருக்கு வழங்கப்பட்டது. மேற்கண்ட குறிப்பாணை வழங்கி கள ஆய்வு நடைபெற்று வரும் வேளையில் திரு.ஆ.கதிரவன் என்பவர் மூன்று நினைவூட்டு கடிதங்கள் அனுப்பியுள்ளார். மேலும் சிவகாசி மாநகராட்சி உதவி பொறியாளர் வார்டு எண் 1 முதல் 24 வரையுள்ள வார்டுகளில் முறையற்ற குடிநீர் குழாய் இணைப்புகளை கண்டறிய நான்கு குழு அமைக்க குறிப்பு கொடுத்துள்ளார். அதன்பேரில் மாநகராட்சி ஆணையாளர், சிவகாசி அவர்களின் செயல்முறை ஆணையின்படி நான்கு குழு அமைத்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் திரு.ஏ.கண்ணன், குழாய் பொருத்துநர்(பொ) என்பவர் குறிப்பாணைக்கு விளக்கம் அளித்துள்ளார். அன்னாரின் விளக்க குறிப்பாணை திருப்தி அளிக்காதபட்சத்திலும் மேலும் அவர் பார்த்துவந்த பணியினை சரிவர செய்யாததாலும் அன்னாருக்கு கூடுதல் பொறுப்பாக பார்த்து வந்த குழாய் பொருத்துநர் பணியிட பொறுப்புகளை ரத்து செய்து மாற்று பணிக்கு மாற்றம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்களிடமிருந்து 25.05.2022 தேதி விசாரணைக்கு நேரில் ஆஜராக கடிதம் வரப்பெற்றது. பொதுப் பணி மேற்பார்வையாளர் மூலம் உரிய விளக்க கடிதம் அளிக்கப்பட்டது. அதன்பின்னர் விளக்க கடிதம் ஏற்றுக்கொள்ளப்படாமல், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முறைகேடான அனுமதியற்ற இணைப்புகள் தொடர்பான கள ஆய்வு செய்திட செயற்பொறியாளர் தலைமையில் ஒரு குழு அமைத்து அக்குழுவிடம் அறிக்கை பெற்று தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் குடிநீர் குழாய் சம்பந்தமாக திருமதி. வி.ஜமுனா ராணி என்பவர் அளித்த மனு மீது இம்மாநகராட்சி உதவி பொறியாளர் அவர்களால் முதற்கட்ட விசாரணை செய்யப்பட்டதில் பல புகார்கள் தெரிவிக்கதன்

அடிப்படையில், உதவி பொறியாளர் குறிப்பின் பேரில் திரு.ஏ.கண்ணன், கிணற்று காவலரை தற்காலிக பணிநீக்கம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

7. இப்பொருள் தொடர்பாக திருமதி.எம்.இந்திராதேவி மற்றும் கணவர் திரு.ஜி.மாரீஸ்வரன் ஆகியோரது 23.06.2022 முறையீட்டு மனு தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் ஆஜராக கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் புகார் தெரிவித்துள்ள திருமதி.எம்.இந்திராதேவி மற்றும் கணவர் திரு.ஜி.மாரீஸ்வரன் அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டுள்ள திரு.ஜி.முனியாண்டி அவர்களின் கடிதத்தில் புதிய குழாய் இணைப்பு பெற மூன்றாண்டுகளுக்கு முன்பே திரு.ஏ.கண்ணன் என்பவர் தனது வீட்டிற்கு வந்து ரூ.25,000/– பெற்று சென்றார் என்று தெரிவித்துள்ளார். மேலும் திரு.முனியாண்டி என்பவரை விசாரணை செய்யப்பட்டதில் அவர் ரூ.25,000/– தொகையை மூன்று வருடங்களுக்கு முன்பாக திரு.பெ.வேலுச்சாமி(லேட்) என்பவரிடம்தான் கொடுத்தேன். திரு.ஏ.கண்ணன் வசம் கொடுக்கவில்லை என ஒப்புதல் வாக்குமூலம் கடிதத்தில் கையொப்பமிட்டு மற்றும் இடது கை ரேகையிட்டு அதற்கான புகைப்படம் மற்றும் ஆதார் கார்டில் கையொப்பம் மற்றும் இடது கை ரேகையிட்டு ஆதாரமாக கடிதம் கொடுத்துள்ளார். திருமதி. ஜி.பாண்டித்தாய் அவர்களின் செயல்முறை ஆணையில் திரு.ஏ.கண்ணன் கிணற்றுக்காவலர் பணி பொறுப்புடன் கூடுதல் பொறுப்பாக குழாய் பொருத்துநர் பணி பார்க்க 16.06.2021–ல்தான் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மூன்று வருடத்திற்கு முன்பாக திரு.பெ.வேலுச்சாமி(லேட்) என்பவர்தான் அப்போது பணியிலிருந்தார் என்பதையும் தெரிவிக்கப்படுகிறது.

8. ஏற்கனவே முறையற்ற குடிநீர் இணைப்புகளை கண்டறிய மாநகராட்சியின் மூலம் குழுக்கள் அமைத்து தொடர் நடவடிக்கை மேற்கொண்டு முறையற்ற இணைப்புகள் துண்டிப்பு செய்து குழாய் துண்டிப்பு பதிவேடு (Disconnection Register)–ல் பதிவு செய்யப்பட்டு வருகிறது. மேலும் திருத்தங்கல் நகராட்சியாக இருந்து சிவகாசி நகராட்சியுடன் இணைக்கப்பட்டு மாநகராட்சியாக அரசால் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அதன் தொடர் நடவடிக்கையாக சொத்து வரி சீரரய்வு பணிகள், மாநகராட்சிக்கான எல்லை விரிவாக்கப் பணியினையும் மற்றும் கணினியில் இரண்டு கணக்குகளை ஒன்றாக இணைக்கும் பணி தற்போது வரை நடைபெற்று வருகிறது. ஆதலால் கணினியில் எந்த ஒரு இரசீது பணபரிவர்த்தனை மேற்கொள்ள முடியாத சூழல் உள்ளது. ஆகவே பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் வங்கி வரைவோலைகள் THE COMMISSIONER SIVAKASI CITY MUNICIPAL CORPORATION பெயரில் வங்கி வரைவோலை பெறப்பட்டு பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டு முறையாக பேணப்பட்டு வருகிறது. மேலும் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளுக்கு விதிக்கப்படும் அபராதத்தொகைக்கும் மற்றும் அதனை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கும் அரசு விதிகளின்படியும், நகர் மன்ற ஒப்புதல் பெறப்பட வேண்டியுள்ளது. மேலும் சிவகாசி மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ளபடி பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு முறையற்ற குடிநீர் குழாய் துண்டிக்கப்படுவதுடன் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

9. முறையீட்டு மனுதாரர்களின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் அவர்கள் சமர்ப்பித்த புகைப்படங்கள், சிவகாசி மாநகராட்சி ஆணையர் அவர்களின் வாக்குமூலம், அறிக்கை மற்றும் அவர் சமர்ப்பித்துள்ள புகைப்படங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

" சிவகாசி மாநகராட்சியில் திருத்தங்கல் பகுதியில் குடிநீர் இணைப்புகளுக்கு மாநகராட்சியால் வசூலிக்கப்பட்ட தொகை முறையாக மாநகராட்சி கணக்கில் சேர்க்கப்படவில்லை. மேலும் குடிநீர் இணைப்புகளுக்காக மாநகராட்சி அலுவலர்களால் முறைகேடாக பெறப்பட்ட கூடுதல் தொகைக்காக ஆணையர், உதவிப்பொறியாளர் மற்றும் கடந்த காலங்களிலிருந்து தற்போது வரை தவறு செய்த அனைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க இம்முறைமன்றத்தைக் கோரியுள்ளார்.

திருத்தங்கல் பகுதியில் மானூர் கூட்டுக்குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. திருத்தங்கல் பகுதியில் உள்ள குடிநீர் இணைப்புகளை அலுவலர்கள் மறு ஆய்வு செய்யும் பொழுது 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடிநீர் இணைப்புகள் டெபாசிட் கட்டாமல் அனுமதி இன்றி கொடுக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு குடிநீர் இணைப்புகளை உடனடியாக துண்டிக்க அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்பதனை விசாரணையில் அறியமுடிகிறது.

திருத்தங்கல் பகுதியில் கடந்த 10 ஆண்டுகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பிற்கு முறைகேடாக ரூ.25 ஆயிரம் வரை வசூல் செய்யப்பட்டு, அனுமதியின்றி குடிநீர் இணைப்பு கொடுத்துள்ளதையும் இதனால் நகராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டதோடு ஆண்டுதோறும் நகராட்சிக்கு வரவேண்டிய குடிநீர் பயன்பாட்டு கட்டணமும் வசூலிக்கப்படாமல் பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதை அறியமுடிகிறது.

குழாய் பொருத்துநர் திரு. வேலுச்சாமி மே, 2021–ல் இறந்துவிட்டதால் கிணற்றுக்காவலராக இருந்த திரு. கண்ணன் அவர்களுக்கு அந்த காலக்கட்டத்தில் இருந்த பல சீனியர்களை புறம் தள்ளிவிட்டு குழாய் பொருத்துநர் (பொ) ஆக பொறுப்பு 16.6.2021 அன்று கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் ஆவணங்களின் அடிப்படையில் அறியமுடிகிறது.

மேலும் குடிநீர் குழாய்களில் அடைப்பு அல்லது பழுதடைந்தாலோ அதனை சரிசெய்ய அரசுக்கு செலுத்த வேண்டிய ரூ.500/- விட ரூ.4000/- முதல் ரூ.5000/- வரை பெற்றுக்கொண்டு அவர்களின் குடிநீர் குழாய்களில் தண்ணீர் அதிகமாக வரும்படி இதிலும் முறைகேடு வேலை செய்து கொடுத்துவிடுவார்கள் எனவும் மனுதரரர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ளதை இம்முறைமன்ற நடுவம் கவனத்தில் கொள்கிறது.

மனுதாரரர்களான திருமதி. எம்.இந்திராதேவி மற்றும் அவரது கணவர் திரு. ஜி.மாரீஸ்வரன் அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டுள்ள திரு. ஜி.முனியாண்டி அவர்களின் கடிதத்தில் புதிய குழாய் இணைப்பு பெற மூன்றாண்டுகளுக்கு முன்பே திரு. ஏ.கண்ணன் என்பவர் தனது வீட்டிற்கு வந்து ரூ.25,000/– பெற்று சென்றார் என்று தெரிவித்துள்ளார். ஆனால் திரு. முனியாண்டி என்பவரை விசாரணை செய்ததில் அவர் ரூ.25,000/– தொகையை மூன்று வருடங்களுக்கு முன்பாக திரு.பெ.வேலுச்சாமி(லேட்) என்பவரிடம்தான் கொடுத்தேன். திரு.ஏ.கண்ணன் வசம் கொடுக்கவில்லை என ஒப்புதல் வாக்குமூலம் கடிதத்தில் கையொப்பமிட்டு கடிதம் கொடுத்துள்ளார் என மாநகராட்சி ஆணையரின் அறிக்கை வாயிலாக அறியமுடிகிறது. இது முரண்பாடான கருத்தாக அமைந்துள்ளது.

ஏற்கனவே முறையற்ற குடிநீர் இணைப்புகளை கண்டறிய குழுக்கள் அமைத்து தொடர் நடவடிக்கை மேற்கொண்டு முறையற்ற இணைப்புகள் துண்டிப்பு செய்து குழாய் துண்டிப்பு பதிவேடு (Disconnection Register)–ல் பதிவு செய்யப்பட்டு வருகிறது. மேலும் திருத்தங்கல் நகராட்சியாக

இருந்து சிவகாசி நகராட்சியுடன் இணைக்கப்பட்டு மாநகராட்சியாக அரசால் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அதன் தொடர் நடவடிக்கையாக சொத்து வரி சீராய்வு பணிகள், மாநகராட்சிக்கான எல்லை விரிவாக்கம் பணியினையும் மற்றும் கணினியில் இரண்டு கணக்குகளை ஒன்றாக இணைக்கும் பணி தற்போது வரை நடைபெற்று வருகிறது. ஆதலால் கணினியில் எந்த ஒரு இரசீது பணபரிவர்த்தனை மேற்கொள்ள முடியாத சூழல் உள்ளது. ஆகவே பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் வங்கி வரைவோலைகள் THE COMMISSIONER SIVAKASI CITY MUNICIPAL CORPORATION பெயரில் வங்கி வரைவோலை பெறப்பட்டு பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டு முறையாக பேணப்பட்டு வருகிறது. மேலும் அனுமதியற்ற குடிநீர் இணைப்புகளுக்கு விதிக்கப்படும் அபராதத்தொகைக்கும் மற்றும் அதனை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கும் அரசு விதிகளின்படியும், நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட வேண்டியுள்ளது. மேலும் சிவகாசி மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ளபடி பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு முறையற்ற குடிநீர் குழாய் துண்டிக்கப்படுவதுடன் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாநகராட்சி ஆணையரின் 11.7.2022 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதை ஏற்க இயலாது. திருத்தங்கல் பகுதி மாநகராட்சியுடன் இணைவதற்கு முன்பே பல ஆண்டுகளாக இந்த முறைகேடு நடந்து கொண்டிருக்கிறது. இதனை அப்போதைய ஆணையர்கள் உட்பட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கவனிக்க தவறியுள்ளார்கள்.

10. இதே பொருள் குறித்து திருத்தங்கல் பகுதியை சார்ந்த திரு. ஆ.கதிரவன் என்பவரின் 11.4.2022 நாளிட்ட மனுவினை விசாரணை செய்த இம்முறைமன்ற நடுவம் தனது 01.06.2022 நாளிட்ட இறுதி ஆணையில் திருத்தங்கல் பகுதியில் எவ்வித முறைகேடான அனுமதியற்ற இணைப்புகள் இல்லை என்று குழாய் பொருத்துநர்(பொ) திரு. கண்ணன் அளித்த அறிக்கையை ஏற்று இது போன்ற குற்றசாட்டுகள் இனிஎழாவண்ணம் இருக்க திரு. கண்ணன் குழாய் பொருத்துநர்(பொ) பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டு R. திருநாவுக்கரசு நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்ற ஆணையரின் அறிக்கையை ஏற்க மறுத்து தவறு செய்தவரை தண்டிக்காமல் அவரை வேறு இடத்திற்கு பணிமாற்றம் செய்துள்ளது பழைய இடத்தில் அவர் செய்தது தவறு இல்லை என்று ஆகிவிடாது என்றும் வேறு இடத்திற்கு பணிமாற்றம் செய்வதை தண்டனையாக கருத இயலாது என்று கருத்து தெரிவித்து கீழ்கண்டவாறு இம்முறை மன்ற நடுவம் ஆணை பிறப்பித்தது.

The DMA is directed to constitute a committee to dig out the details of the number of illegal water supply connections made by the people of the area without the permission, clearance and rules of the then Municipality. Revenue loss on this account has to be worked out and collected from both the users and the field level officials responsible for this loss to the Local Body. The Municipality has only transferred a Tap Fitter which appears to be an eyewash to hoodwink the system. The Engineers, Overseers and other area officials should be also chargesheeted for this violation and loss of revenue to the Local Body. The whole process should be completed within 60 days. Local Fund Audit Directorate may also audit this loss simultaneously.

11. 01.6.2022 ல் இம்முறைமன்ற நடுவத்தால் வெளியிடப்பட்ட ஆணையினை இதுவரையில் செயல்படுத்தாத ஆணையாளரின் செயலினை இம்முறைமன்ற நடுவம் மிகவும்

வன்மையாக கண்டிப்பதோடு இது அலுவலர்களின் அலட்சியத்தையும் மெத்தனப்போக்கையும் காட்டுவதாகவே இம்முறைமன்ற நடுவம் பதிவு செய்கிறது.

12. மேற்குறிப்பிட்டுள்ள இம்முறைமன்ற நடுவத்தின் ஆணையின்படி குறைகள் முற்றிலும் களையப்படாத காரணத்தால்தான் இம்முறைமன்றத்திற்கு மீண்டும் அதே குறைகளை சுட்டிக்காட்டி மனுதாரர்களால் மனு செய்யப்பட்டுள்ளது என்பதை தெள்ளத்தெளிவாக அறிய முடிகிறது. மேலும் இம்முறைமன்றத்தின் ஆணைகளை உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும் என்ற அக்கறை சிவகாசி மாநகராட்சி அலுவலர்களுக்கு துளியும் இல்லை என்பதையும் நன்கு அறியமுடிகிறது. இம்முறைமன்றத்தின் ஆணையினை செயல்படுத்தாத சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்கள் மீதும் நடைமுறையிலுள்ள விதிகளின்படி துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

13. திருமதி M. இந்திராதேவி மற்றும் அவரது கணவர் திரு. G.மாரீஸ்வரன் இருவரின் மனு குறித்து இம்முறைமன்ற நடுவம் அறிக்கை கோரியதும் அவசரகதியாக முறையற்ற இணைப்புகளை கண்டறியகுழு அமைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் குடிநீர் இணைப்புகள் வழங்கியதில் முறைகேடு என புகார் வந்ததை தொடர்ந்து அதில் சம்பந்தப்பட்ட திரு. கண்ணன், கிணற்றுக்காவலர் என்பவரை தற்காலிக பணிநீக்கம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது என்று தெரிவித்திருப்பதை ஏற்க இயலாது. 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த முறைகேடுகள் நடந்து கொண்டிருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு மேலாக அலட்சியமாகவும் பொறுப்பற்றும் கடமை தவறியும் இருந்துவிட்டு திரு. ஆ. கதிரவன் என்பவரால் கொடுக்கப்பட்ட மனுவில் விசாரணை செய்து 1.6.2022ல் இம்மன்றத்தால் வெளியிடப்பட்ட ஆணையினையும் செயல்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் மெத்தனமாக இருந்த நிலையில் திருமதி M. இந்திராதேவி மற்றும் திரு. மாரீஸ்வரன் ஆகியோர் புகார்களுக்கு எங்கும் தீர்வு பெறப்படாத நிலையில் இம்முறைமன்றத்தை நாடி உள்ளனர். பிரச்சினைக்கு தீர்வு காணாததற்கு காரணமாக இருந்த ஆணையாளர் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள் மீதும் நடைமுறையிலுள்ள உரிய சட்ட விதிகளின் கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை உடனே மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் சிவகாசி மாநகராட்சி ஆணையாளரை குழாய் பொறுத்துநர்(பொ) திரு. கண்ணன் மற்றும் முறையற்ற குடிநீர் இணைப்புகள் வழங்கிய சம்பந்தப்பட்டவர்கள் அனைவரின் மீதும் காவல்துறையில் புகார் அளித்து குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. குடிநீர் இணைப்பு முறைகேடுகளுக்கு முக்கிய காரணமாக உள்ள குழாய் பொருத்துநர்கள் மற்றும் ஏனைய கள அலுவலர்கள் தொடர்ந்து ஒரே இடத்தில் பல ஆண்டுகள் பணிபுரிவது இம்மாதிரியான முறைகேடுகளுக்கு காரணமாக உள்ளதால் அவ்வாறு முறைகேடுகள் தொடராதிருக்க, ஒரே இடத்தில் பல ஆண்டுகளாக பணிபுரியும் குழாய் பொருத்துநர்கள் மற்றும் ஏனைய கள அலுவலர்களையும் வெவ்வேறு நகராட்சிகளுக்கு பணியிடமாறுதல் செய்யவும், பொதுமக்களிடமிருந்து குடிநீர் இணைப்புகளில் பழுதோ அல்லது குடிநீர் இணைப்பு வேண்டியோ மனுக்கள் பெறப்பட்டால் அதனை சிறப்பு இனமாகக்கருதி பொதுமக்களிடமிருந்து உரிய கட்டணங்களை பெற்று மக்களின் அடிப்படை தேவைகளில் ஒன்றான குடிநீர் இணைப்பு கிடைக்க

அல்லது பழுது நீக்கும் நடவடிக்கைகளை காலதாமதம் செய்யாமல் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் சிவகாசி மாநகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2022-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 08 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி.M.இந்திராதேவி,
திரு. G. மாரீஸ்வரன்,
எண்.6/4, சுப்பிரமணியன் கோவில் தெரு,
திருத்தங்கல் – 626 130.
சிவகாசி மாநகராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

2. ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக
12-8-2022